# THE FXEC TIMES

Empowering your Future

தமிழ்

www.francisxavier.ac.in
facebook.com/fxengg/
instagram.com/fx_ec/

மலர் - 1

இதழ் - 4

ஆகஸ்ட் 2022

# 76-வது வருட சுதந்திரதின விழா எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரியில் கொண்டாட்டம்!

## நிறுவனர் முனைவர் S.கிளிட்டஸ் பாபு பங்கேற்பு

நெல்லை வண்ணார்ப்பேட்டை பொறியியல் கல்லூரியில் இந்தியாவின் 75வது வருட நிறைவு சுதந்திரதின விழா கோலாகலமாக கொண்டாடப்பட்டது. கல்லூரி வாயிலில் முதல்வர் V.வேல்முருகன் தேசியக் கொடியேற்றினார், இதனையொட்டி சுதந்திர தின விழா (Freedom contest 2022) போட்டிகள் நடைபெற்றன. இதில் 'நெகிழி இல்லா நெல்லை' என்ற விழிப்புணர்வு டி. சர்ட்களை ஸ்காட் கல்வி குழும நிறுவனர் S.கிளிட்டஸ் பாபு மாணவர்களுக்கு வழங்கினார்.

75வது வருட நிறைவு சுதந்திர தின விழாவை முன்னிட்டு எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரி முகப்பில் கல்லூரி முதல்வர் V.வேல்முருகன் தேசியக் கொடியேற்றினார். கல்லூரியின் அனைத்து துறை கட்டிடங்களிலும் அந்தந்த துறை பேராசிரியர்கள் தேசியக் கொடியை ஏற்றினர்.

இதனிடையே கல்லூரியின் நாட்டு நலத்திட்ட இயக்கம் (NSS) சார்பில் 'நெகிழி இல்லா நெல்லை' என்ற விழிப்புணர்வு வாசகமிட்ட டீ.ஷர்ட்களை ஸ்காட் கல்வி குழும நிறுவனர் S.கிளிட்டஸ் பாபு மாணவர்களுக்கு வழங்கினார்.

மேலும், கல்லூரி வளாகத்தில் இந்திய சுதந்திரப் போராட்டத்துக்காக பாடுபட்ட தலைவர்களை நினைவு கூறும் விதமாக புகைப்பட கண்காட்சி வைக்கப்பட்டிருந்தன. அனைத்து துறை மாணவியரின் பல வர்ணங்களில் கண்ணைக் கவரும் வகையில் வரைந்த ரங்கோலி போட்டிகள் நடைபெற்றன.

ஓவியம், பெயின்டிங், போட்டோகிராபி, நடன போட்டி, சுதந்திர போராட்ட வீரர்கள் குறித்த பேச்சுப் போட்டி, குறும் படம் உள்ளிட்ட போட்டிகள் நடை பெற்றன. இப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கல்லூரி முதல்வர் V.வேல்முருகன் பரிசுகள் வழங்கினார்.

இந்தியாவின் 76-வது சுதந்திர தினம், சுதந்திர திருநாள் அமுதப்பெருவிழா நெல்லை வண்ணார்ப்பேட்டை எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் வேல்முருகன் தேசியக்கொடி ஏற்றியும், இனிப்புகள் வழங்கியும் சிறப்பாக கொண்டாடப்பட்டது

இதில் பேசிய முதல்வர் வேல்முருகன், ஆங்கிலேயரிட மிருந்து சுதந்திரம் பெற்ற தேசிய தலைவர்களை நினைவு கூர்ந்தார். பொது மேலாளர்கள் K.ஜெயக்குமார், S.கிருஷ்ணகுமார் ஆகியோர் பேசுகையில், 75 வது சுதந்திரதின விழாவை நாம் மகிழ்ச்சியுடன் கொண்டாடி கொண்டிருப்பதாக கூறினார்கள்.

இந்நிகழ்வில் பொதுமேலாளர்கள் K.ஜெயக்குமார், S .கிருஷ்ணகுமார், முதல்வர் V.வேல்முருகன், வளாக மேலாளர் J.சகாரியா கேபிரியல் பேராசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.



என்.எஸ்.எஸ். சார்பில் 'நெகிழி இல்லா நெல்லை' விழிப்புணர்வு டி. சர்ட்களை கல்லூரி நிறுவனர் முனைவர் S.கிளிட்டஸ் பாபு மாணவர்களுக்கு வழங்கினார்.



தேசியக்கொடியுடன் மாணவர்கள்



கல்லூரி மாணவிகளின் ரங்கோலி போட்டி



சுதந்திர தின விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் V.வேல்முருகன் தேசியக்கொடியேற்றினார். பொதுமேலாளர்கள் முனைவர் K.ஜெயக்குமார்,S கிருஷ்ணகுமார், வளாக மேலாளர் J.சகாரியா கேபிரியல் ஆகியோர் மரியாதை செய்தனர்.







கல்லூரி வளாகத்தில் 76-வது வருட சுதந்திரதின விழா கொண்டாட்டத்தில் பொதுமேலாளர்கள் முனைவர் K.ஜெயக்குமார், S.கிருஷ்ணகுமார், கல்லூரி முதல்வர் முனைவர் V.வேல்முருகன், வளாக மேலாளர் J.சகரியா கேபிரியல் மற்றும் பேராசிரியர்கள், அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

THE FXEC TIMES
Empowering your Future
தமிழ்
மலர் - 1
இதழ் - 4
ஆகஸ்ட் 2022
www.francisxavier.ac.in
facebook.com/fxengg/
instagram.com/fx_ec/

# எப்.எக்ஸ். கல்லூரி மாணவர்கள் சாதனை! புதிய கண்டுபிடிப்புகளுக்கு காப்புரிமை!

## நிறுவனர் முனைவர் S. கிளிட்டஸ் பாபு பாராட்டு

நெல்லை வண்ணார்பேட்டை எப்.எக்ஸ் பொறியியல் கல்லூரி மாணவர்கள் விவசாய பயன்பாட்டுக்காக கண்டுபிடித்த ரோபோட் கருவிக்கு காப்புரிமை கிடைத்துள்ளது. மேலும், பல்வேறு ரோபாட்களை கண்டுபிடித்து சாதனை படைத்துள்ளனர்.

பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரியில் பொறியியல் படிப்பில் மாணவர்கள் சிறந்து விளங்கும் நோக்கத்துடன் மேம்பட்ட பாடத்திட்டம் அறிமுகபடுத்தபட்டு மிக சிறந்த லேப் வசதிகளுடன் மாணவர்களுக்கு தரமான கல்வி அளிக்கப்பட்டு வருகிறது. தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் அளவுக்கு படிக்கும்போதே பயிற்சி பெறுவதற்கான என்ஐ லேப் வியூ (NI Lab view) அகாடமியில் லேப் வியூ புரோகிராமிங் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது இந்த ஆண்டு 3ம் ஆண்டு மற்றும் இறுதி ஆண்டு மாணவர்களுக்கு தொழிற்சாலை பார்வையிடல் பயிற்சி மூலம் சேஷாய் பேப்பர் மில், சுஸ்லான் நேஷனல் இன்ஸ் டிடியூட் ஆப். விண்ட் எனர்ஜி குளோபல் சர்வீசஸ், வீனஸ் ஹோம் அஃப் ளையன்சஸ் போன்ற நிறுவனங்களுக்கு அழைத்து செல்லப்பட்டு பயிற்சி அளிக்க ப்பட்டது.

மாணவர்கள் பயிற்சி பெறு வதற்கான புதிய கண்டு பிடிப்பு திட்டங்களை பேராசிரியர்கள் அளித்து வருகின்றனர்.

தற்போது விவசாயத்துக்கு பயன்படும் ரோபோட்களை கண்டுபிடித்துள்ளனர். ரோ போட்டில் நுண்ணிய கேமரா பொருத்தப்பட்டு ள்ளது.


ரோபோட் கருவியுடன் மாணவர்கள்

அதன் மூலம் பயிர்களுக்கு ரோபோட் கருவி மூலம் துல்லி யமாக தண்ணீர் பாய்ச்சுவது, வரப்பு சரியான வடிவத்தில் வெட்டும் ரோபோட் கருவியை (ALIGNMENT AND TILLING OF FIELD BUND) கண்டு பிடித்து ள்ளனர்.

மேலும், நெல் வயலின் தேவையற்ற, தேங்கி நிற்கும் நீரை கண்டுபிடித்து வெளி யேற்றும், அளவை அறியும் கருவி, வீட்டினுள் தானே குப்பை சேகரிக்கும் நவீன இயந்திரம், படிக்கட்டு சுத்தம் செய்யும் . ரோபோ, வாகனம் ஓட்டும் போது பயன்படுத்தும் கருவி, சமையல் செய்யும் போது எத்தனை விசில் சப்தம் என்பதை அறியும் கருவி, வன விலங்குகள் நுழைவதை கண்காணிக்கவும், ஊடுருவும் மர்ம நபர்களை சென்சார் கேமரா மூலம் கண்டுபிடிக்கும் கருவி, பேருந்தில் குழந்தைகள் பயணிக்கும் போது எச்சரிக்கை



செய்யும் கருவி, (CHILD SAFETY ALARM SYSTEM) சிட்ரஸ் பழங்களின் விளைச்சலை மதிப்பிடு வதற்கான தொழில் நுட்பம் (SORTING AND GRADING OF CITRUS FRUITS) பூமிக்கடியில் கேபிள் பழுதை கண்டுபிடிக்கும் கருவி, (UNDERGROUND FAULT CABLE DETECTOR) விலங்குகளின் ஊடுருவலை விரட்டும் அலார கருவி, வாகனகளில் பெட்ரோல் அளவை கண்டறியும் மானிட்டர், (PETROL LEVEL MONITORING SYSTEM) உள்ளிட்ட 16 கருவிகளை கண்டுபிடித்து சாதனை படைத்துள்ளனர்


இந்த துறையில் பயின்ற 56 மாணவர்கள் டிசிஎஸ், இன் போசிஸ், விப்ரோ நிறு வன ங்களில் வேலைவாய்ப்பு பெற்று ள்ளனர். துறை மாண விக்கு BYJU'S நிறுவனத்தில் ரூ.6 லட்சம் ஆண்டு வருமானத்தில் வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது.



# எலெக்ட்ரானிக்ஸ் - ஐ.ஓ.டி ஆய்வக மாணவர்கள் கண்டுபிடிப்புகள்







ஆய்வகத்தில் மாணவர்கள்

மாணவர்களை அடுத்த தலைமுறை தொழில்நுட்பத்தில் ஆராய்வதற்கும், குறிப்பிட்ட தேவைகளுக்கு ஏற்றவாறு தயாரிப்புகளை உருவாக்க மாண வர்களுக்கு சிறந்த தளங் களை வழங்குவதில் பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி முன்ன ணியில் உள்ளது.

முதல் ஆண்டு மாண வர்களுக்கு 30 நாள் அடித்தள திறன் (Basic skill) பயிற்சி திட்டத்தை கல்லூரி வழங் குகிறது. பொறியியல் படிப்பின் அடிப்படைகள் குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது, இது மாணவர்களிடம் பொறியியல் வாழ்க் கையை நோக்கிய ஆர்வ த்தை உருவாக்குகிறது.

கல்விப் பாடத்திட்டம் நிறைய நடைமுறை வெளிப்பாடுகளை அளிக்கும் வகையில் கட்டமைக் கப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு மாணவருக்கும் புதுமையான யோசனைகள் மற்றும் புதுமையான தயாரிப்புகளை வடிவ மைக்கும் வகையில், வளாக த்தில் 20 அதிநவீன பயன் பாட்டு ஆய்வகங்கள் நிறுவப் பட்டுள்ளன.


மாணவர்கள் பிற்பகல் அமர்வு களில் தொழில்துறை பயன் பாட்டு ஆய்வகங்களில் (Applied Lab) வேலை செய்ய அனுமதிக் கப்படு கிறார்கள். சமூகத்திற்கு ஆதரவாக புதிய தயாரிப் புகளை உருவாக்குவதிலும் யரின் ஆதரவுடன் மாண வர்கள் காப்புரிமைகளை வெளியிடுவதில் ஈடுபட்டு ள்ளனர் 2021-2022 ஆம் கல்வி யாண்டில், அப்ளைடு லேப்கள் மூலம் மாணவர்கள் 43க்கும் மேற்பட்ட திட்டங்கள், 56 தயாரிப்புகளை உருவாக்கி 49க்கும் மேற்பட்ட தேசிய அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளனர். மாணவர்கள் முயற்சிகளின் விளை வாக 2021-2022 கல்வியாண்டில் அனைத்து ஆய்வகங்களின் மாணவ உறுப்பினர்கள் ஆண்டு முழு வதும் துடிப்புடன் செயலில் ஈடுபட்டு வருகின்றனர்.





ரோபாட்டிக்ஸ் மற்றும் ஆட்டோமேஷன் அப் ளைடு லேப் மாணவர்கள், எலக்ட்ரிக்கல் மற்றும் எலெக்ட் ரானிக்ஸ் இன்ஜினியரிங் துறை பேராசிரியர் முனைவர் ஏ.ரவி யின் வழிகாட்டுதலின் கீழ், "புல்டு பண்டின் சீரமைப்பு மற்றும் டில்லிங்" என்ற காப்புரிமையை வெளியிட்டனர்.

உட்பொதிக்கப்பட்ட மற்றும் IOT பயன்பாட்டு ஆய்வகத்தின் மாணவர்கள் "ஜி.எஸ்.எம் மற்றும் இன்டர்நெட் ஆஃப் திங்ஸ் (ஐஓடி) பயன்படுத்தி ஸ்மார்ட் மேன் ஹோல் கண்காணிப்பு அமைப்பு பற்றிய காப்புரிமையை வெளி யிட்டனர், இது மின்னவியல் மற்றும் தொடர்புத் துறையின் இணைப் பேராசிரியர் டாக்டர். கே. லக்ஷ்மி நாராயணன் வழி காட்டுதலின் பேரில் நடை பெற்றது. ஐடியேஷன் ஆய் வகத்தின் மாணவர், "எல் லைப் பாதுகாப்பு கண்காணிப்பு அமைப் பில் செயல் திறனை மேம்படுத்த ஸ்மார்ட் டெக்னிக்கை செயல் படுத்துதல்" மற்றும் "விபத்து களைத் தடுக்க மற்றும் API ஐப் பயன்படுத்தி வழி கண்டறியும் பயன் பாட்டை வழங்குவதற்கான பாதுகாப்பான பயணத்திற்கான அறிவார்ந்த சாதனம்" என்ற தலைப்பில் இரண்டு . காப்பு ரிமைகளை வெளியிட்டார். இது தகவல் தொழில் நுட்பத் துறை பேராசிரியர் டி.சி. சுப்புலட்சுமி வழிகாட்டுதலின் பேரில் நடை பெற்றது.



# செயற்கை நுண்ணறிவுத் துறை மாணவர்களின் திட்டங்களுக்கு 3ஐ இன்போடெக் நிறுவன அதிகாரி பாராட்டு!




AI & DS மாணவர்களின் திட்ட தயாரிப்பை 3ஐ இன்போடெக் அதிகாரி பார்வையிடுகிறார்



பொதுமேலாளர்கள் முனைவர் கே.ஜெயக்குமார், ஸ்.கிருஷ்ணகுமார், கல்லூரி முதல்வர் வேல்முருகன் மற்றும் பேராசிரியர்களுடன் ஆலோசனை செய்தார்.

நெல்லை வண்ணார்பேட்டை எப்.எக்ஸ் பொறியியல் கல்லூரியின் பி.டெக் செயற்கை நுண்ணறிவு மற்றும் டேட்டா சயின்ஸ் துறை மாணவர்கள் தொழில் ஆதரவு கல்வி பெறுவதற்காகவும், மேலை நாடுகளில் வேலைவாய்ப்பு பெறுவதற்காகவும் எம்.என்.சி (MNC) தொழில் நிறுவனங்களுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

அண்மையில் 3i இன்ஃபோடெக் நிறுவனத்தின் உயர் தொழில் நுட்பக் கல்விக்கான சிறப்பு மையம் (Centre of Excellence) . இப்பகுதியுள்ள மாணவர்கள் வேலைவாய்ப்பு பயிற்சி பெறுவதற்காக செயல்பட்டு வருகிறது.

நெல்லை வண்ணார்பேட்டை எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரியில் பி.டெக் செயற்கை நுண்ணறிவு மற்றும் டேட்டா சயின்ஸ் துறை முதல் ஆண்டு மாண வர்களுக்கான 3i இன்ஃபோடெக் நிறுவனத்தின் கலந்துரையாடலை ஏற்பாடு செய்தது.

இதில் பெங்களூரு கிளை 3i இன்போடெக் நிறுவன அதிகாரி பிரகாஷ் சுந்தர்ராஜன் எப். எக்ஸ். கல்லூரி நிர்வாகம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மாணவர்களிடையே கலந்துரையாடலுக்காக வருகை தந்தார்.

சம்பத்தப்பட்ட துறை செயற்கை நுண்ணறிவு மற்றும் டேட்டா சயின்ஸ் ஆய்வகங்களை பார்வையிட்டார். ரோபோடிக்ஸ் மற்றும் ஆட்டோமேஷன் ஆய்வக அலுவலர்களுடன் விவாதித்தார்.

இதனையடுத்து செயற்கை நுண்ணறிவு துறை முதலாண்டு மாணவர்களுடன் கலந்துரையாடல் செய்தார். அப்போது மாணவர்கள் கேள்விகளுக்கு அவர் பதிலளித்தார். மாணவர்கள் எவ்வாறு உபகரணங்களுடன் கற்று கொள்ள வேண்டும் என்றும், டூல்ஸ் (tools) பயன்படுத்துவது குறித்தும், இந்த துறை மாணவர்கள் ப்ரொஜெக்ட்களில் நன்கு பயிற்சி பெற வேண்டும் என கேட்டுக்கொண்டார். மாணவர்களுக்கு 3i இன்ஃபோடெக் இண்டஸ்ட்ரி சப்ளைடு படிப்புகள் அளிப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது. இந்த துறை ப்ரொஜெக்ட்களை செய்து வெற்றி பெற்ற 3 மாணவர்களை பாராட்டினார். அந்த மாணவர்களை தங்களது நிறுவனத்திற்கு நேரில் வருகை தந்து, வெளிநாட்டு வல்லுநர்கள் முன்பு டெமோ பண்ணுமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

இதேபோல் எஸ்டெர்லிங் நிறுவனத்து கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. இது வணிகங்களின் டிஜிட்டல் மாற்றத்திற்கு உதவும் ஒரு தொழில் நுட்ப நிறுவனம் ஆகும். மேலை நாடுகளில் செயல்பட்டு வருகிறது. அந்நிறு வனத் தலைவர் பாட்ரிக் அமல்ராஜ் செயற்கை நுண்ணறிவு மற்றும் டேட்டா சயின்ஸ் துறை மாணவர்களுக்கு மேலை நாடுகளில் நாட்டு நிறுவனங்களில் புதிய தொழில் நுட்பங்கள் பயன்படுத்துவது குறித்து அவர் மாணவர்களுக்கு விளக்கம் அளித்தார். செயற்கை நுண்ணறிவு மற்றும் டேட்டா சயின்ஸ் துறை மாணவர்கள் அனைத்து துறைகளில் நவீன தொழில் நுட்பங்களைக் கற்று கொண்டு வேலைவாய்ப்பு பெறலாம் என்று கூறினார். விண்வெளித்துறை, தொழில் நுட்பத் துறையில் டேட்டா சயின்ஸ் பயன்படுத்துவது குறித்து மாண வர்கள் ஆர்வத்துடன் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் கல்லூரி பொதுமேலாளர்கள் முனைவர் K.ஜெயக்குமார், S.கிருஷ்ணகுமார், கல்லூரி முதல்வர் முனைவர் V.வேல்முருகன், வேலைவாய்ப்புத்துறை டீன் முனைவர் ஞான சரவணன், திறன் பயிற்சி இயக்குநர் பாலாஜி மற்றும் தொழில் முனைவோர் துறை இயக்குநர் முனைவர் லூர்டஸ் பூபாலராயன் துறைத் தலைவர் முனைவர் அனிதா மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.



எஸ்டெர்லிங் நிறுவனத் தலைவர் பாட்ரிக் அமல்ராஜ் மாணவர்களுடன் கலந்துரையாடல் செய்தார்.



AI & DS மாணவர்கள் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

## தேசிய கருத்தரங்கு எப்.எக்ஸ்.கல்லூரிக்கு முதல் பரிசு!

எப்.எக்ஸ்.பொறியியல் கல்லூரியின் புரோகிராமிங் மற் றும் கோடிங் லேப் முதலாண்டு மாணவியர் அஃப்ரின். ஓ.எம், காவியா, S, காயத்ரி அன்ன பாக்கியம் ஆகியோர் நாசரேத் ஜெயராஜ் அன்ன பாக்கியம் பொறியியல் கல்லூரியில் நடந்த தேசிய அள விலான தொழில்நுட்ப கருத் தரங்கில் சமர்ப்பித்த கட்டுரைக்கு முதல் பரிசு கிடைத்தது. கிரீன் கம்ப்யூட்டிங் தலைப்பில் கட்டுரை சமர்ப்பித்தனர். கிரீன் கம்ப்யூட்டிங் என்பது கணினிகள் மற்றும் அவற்றின் வளங்களின் சுற்றுச்சூழல் பொறுப்பு மற்றும் சுற்றுச்சூழல் நட்பு பயன்பாடு ஆகும்.



தேசிய அளவிலான தொழில்நுட்ப கருத்தரங்கில் பங்கேற்றுபரிசு பெற்ற மாணவியரை கல்லூரி அப்ளைடு லேப் இயக்குநர் S. கிருஷ்ணகுமார் முதல்வர் முனைவர் . V. வேல்முருகன், கணினித் துறை தலைவர் முனைவர் G. அரவிந்த் சுவாமி நாதன், E.மனோகர், ஆகியோர் பாராட்டினர்.

# தேசிய அளவிலான ஸ்மார்ட் இந்தியா போட்டி: இறுதி போட்டிக்குத் தேர்வாகி சாதனை!

நெல்லை வண்ணார்ப்பேட்டை எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரி மாணவர்கள் தேசிய அளவில் நடந்த ஹேக்கத்தான் போட்டியில் பங்கேற்று இந்திய அரசின் முக்கிய துறைகள் பயன் பெறக்கூடிய வகையில் புதிய கண்டுபிடிப்பு யோசனைகளை வழங்கி இறுதி போட்டிக்குத் தேர்வாகியுள்ளனர்.

உயர் கல்வித் துறையின் அகில இந்தியா தொழில்நுட்பக் கழகமும், மத்திய கல்வி அமைச்சகமும் இணைந்து ஆண்டு தோறும் தேசிய அளவிலான ஹேக்கத்தான் போட்டிகளை நடத்துகிறது. இதில் உயர் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்கள் கலந்து கொள்ளலாம். இரு துறைகள் இணைந்து நடத்தும் இந்தப் போட்டியில், விவசாயம், தொழில் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறந்த யோசனைகளை சமர்ப்பிக்கும் மாண வர்கள் இறுதிப் போட்டிக்கு தேர்வு செய்யப்படுவார்கள்.

எப்.எக்ஸ் பொறியியல் கல்லூரியில் அனைத்து துறை மாணவர்களுக்கும் திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மாணவர்கள் ஆர்வத்துடன் திறன் மேம்பாட்டு பயிற்சி பெறுவதன் காரணமாக தேசிய அளவிலான பல்வேறு போட்டிகளில் பங்கேற்று பரிசுகளை பெறுகின்றனர்.

பல்வேறு துறை சார்பாக 499 சாப்ட்வேர் மற்றும் 104 ஹார்ட்வர் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் .




கல்லூரி மாணவர்களை முதல்வர் முனைவர் V.வேல்முருகன் பாராட்டினார்

போட்டிகள் முன் வைக்கப்பட்டன இதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டுக்கான தேசிய ஹேக்கத்தான் போட்டியில் பங்கேற்க எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரியின் 76 மாணவர்கள் விண்ணப்பித்தனர்.

அதில் தேசிய பேரிடர், இந்திய உணவு துறை, பயோமெடிக்கல், .மீன்வளம் உள்ளிட்ட துறைகளின் சிக்கலான பிரச்சினைகள் இடம் பெற்றிருந்தன.

இதில், மாணவி தர்ஷினி தலைமையில் பங்கேற்ற குழு ஏரோ ஸ்பேஸ் துறை சார்பில் பங்கேற்றனர்.

இதேபோல் மாணவர் பாலாஜி தலைமையில் பங்கேற்ற குழு, உணவு துறைலும், கார்த்திக் தலைமையில் பங்கேற்ற குழு தேசிய பேரிடர் துறையிலும் தாக்கல் செய்த திட்ட யோசனை அறிக்கைகளை தேசிய அளவிலான வல்லுநர் குழு இறுதிப் போட்டிக்குத் தேர்வு செய்தது. மேலும், மாணவர்கள் கோடீஸ்வரன் தலைமையில் பங்கேற்ற குழு உணவுத் துறையிலும், கார்த்திகேயன் தலைமையில் பங்கேற்ற குழுவிவசாய துறையிலும் சமர் பித்த அறிக்கை ஆய்வில் உள்ளன. இந்தப் போட்டிகளில் மாணவர்கள் கலந்து கொள்வதன் மூலமாக நல்ல அனுபவத் திறன் கிடைப்பதோடு, அரசின் அனைத்து துறைகளில் ஏற்படும் பிரச்சனைகளை புதிய யோசனைகள் மூலம் தீர்வு காண்பது குறித்த அறிவுத் திறன் கிடைக்கும்.

எப். எக்ஸ். பொறியியல் கல்லூரி மாணவர்கள் இறுதி போட்டியில் வெற்றி பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்தமைக்காக கல்லூரி முதல்வர் முனைவர் V.வேல்முருகன் பாராட்டினார்..

இதற்கான ஒருங்கிணைப்பு ஏற்பாடுகளை தொழில் முனைவோர் துறை இயக்குநர் முனைவர் லூர்டஸ் பூபாலராயன், உதவி பேராசிரியர் M. ஐய்யனார் ராஜா மற்றும் பேராசிரியர் அனிதா ஆகியோர் செய்திருந்தனர்.

## உலக இயற்கை பாதுகாப்பு தினம்!

நெல்லை வண்ணார்பேட்டை எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரியில் இளைஞர் செஞ்சுலுவை சங்கம் சார்பில் உலக இயற்கை பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு மரக் கன்றுகள் நடும் விழா நடைபெற்றது.

ஆண்டுதோறும் ஜூலை 28-ந் தேதி இயற்கை வளங்களை பாதுகாத்தல், இயற்கை வளங்களின் அவசியம் குறித்து மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் ஆகிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு, 'உலக இயற்கை வளம் பாதுகாப்பு தினம்' கடைப்பிடிக்கப்படுகிறது.

இதனையொட்டி எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரியில் மரக்கன்றுகளை நடும் நிகழ்ச்சி நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் V.வேல்முருகன் மரக்கன்றுகளை நட்டினார். இந்நிகழ்ச்சியில் பொதுமேலாளர்கள் முனைவர் K.ஜெயக்குமார், S.கிருஷ்ணகுமார், கல்லூரி முதல்வர் முனைவர் V.வேல்முருகன், வளாக மேலாளர் J.சகாரிய கேப்ரியல், தேர்வு கட்டுப்பட்டு அதிகாரி முனைவர் ராஜகுமார் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கல்லூரியின் இளைஞர் செஞ்சுலுவை சங்கச் ஒருங்கி ணைப்பாளர் பேராசிரியர் J.டேவிட் அய்லிங், துணைத் தலைவர் T.ஆபிரகாம் ஜெபமணி ராஜ் மற்றும் ஒருங்கிணைப்பாளர்கள் M.கார்த்திக், M.இசக்கி J.ஆண்ட்ரூ ஆண்டனி, D.பிரிதிவிராஜ் விமல், S.வில்வகுமார், ஆலன், J.ஜெரோம், V.மதன் கோபால் A.அஜய் ரூபன், A.அமித் ஆகியோர் செய்திருந்தனர்.
[



## மொபைல் ரோபாட்டிக்ஸ் கட்டாயத் திறன் பயிற்சி

ஒரு மொபைல் ரோபோ என்பது மென்பொருளால் கட்டுப்படுத்தப்படும் ஒரு இயந்திரமாகும், இது சென்சார்கள் மற்றும் பிற தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அதன் சுற்றுப்புறங்களை அடையாளம் கண்டு அதன் சுற்றுச்சூழலைச் சுற்றி நகர்த்துகிறது. மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த திறன்களைக் குறிக்கும் நோக்கத்துடன் போட்டி நிலப்பரப்பு, மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்பு பொறியியல் துறை மொபைல் நடத்துகிறது. இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்கு ரோபோட்டிக்ஸ் திறன் பயிற்சி. மொபைலாக ரோபாட்டிக்ஸ் என்பது எதிர்கால தொழில்நுட்பங்களில் மிக உயர்ந்த மதிப்பிடப்பட்ட ஒன்றாகும். இந்த திறமை மொபைல் ரோபோவின் உள்ளார்ந்த பிரச்சனைகளை மையப்படுத்த பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டது. உலகத் திறன்களுக்கேற்ப பாடத்திட்டம் வகுக்கப்பட்டது. இந்த திறன் பயிற்சியின் முக்கிய நோக்கம் அதை செயல்படுத்துவதாகும் தீர்வு, லைன் ஃபாலோவர் போன்ற பல்வேறு ரோபோக்களை வடிவமைக்க Arduino-ஐப் பயன்படுத்துகிறது. முதல் அமர்வில். Arduino UNO, பல்வேறு சென்சார்கள் உட்பட ரோபாட்டிக்ஸ் கூறுகள் பற்றி மாணவர்கள் நன்கு அறிந்தனர்

அல்ட்ராசோனிக் சென்சார், பிஐஆர் சென்சார், வெப்பநிலை சென்சார் மற்றும் வைஃபை, மொபைல் ரோபோட்டிக்ஸ் தொடர்பான தகவல் வீடியோக்கள் காட்டப்பட்டன மாணவர்கள். தினசரி மதிப்பீடு தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது. மொத்தம் 52 மாணவர்கள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

## 'எனி டிகிரி.காம்' நிறுவனத்துடன் எப்.எக்ஸ்.பொறியியல் கல்லூரி புரிந்துணர்வு ஒப்பந்தம்!



'எனி டிகிரி.காம்' நிறுவனத்துடன் எம்.சி.ஏ துறை காணொளி மூலம் புரிந்துணர்வு ஒப்பந்தம்.

நெல்லை வண்ணார்பேட்டை எப்.எக்ஸ்.பொறியியல் கல்லூரியின் எம்.சி.ஏ. துறை சார்பில் வேலைவாய்ப்பு சேவை பெறுவதற்காக அண்ணா பல்கலைக் கழகத்தில் இயங்கும் அடல் இன்குபேஷன் சென்டரான 'எனி டிகிரி.காம்' (AnyDegre.com) என்ற நிறுவனத்துடன் எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரி புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரியின் எம்.சி.ஏ துறை ஐ.ஓ.டி லேப் வசதியுடன் 100 சதவீத வேலைவாய்ப்பு என்ற நோக்கத்தோடு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு எம்.சி.ஏ படித்த இறுதி ஆண்டு மாணவர்கள் அனைவரும் டிசிஎஸ் (TCS). இன்போசிஸ் (Infosys), அடாஸ் (Atas), சின்டெல் (Syndel), குளோபல் (Global), வொர்க் லைன் (workline), மொபியஸ் (mobius), பைஜூஸ (Byju's), டெக் மகேந்திர (Tech mahendra), ரகுட்டன் (Rakuten) உள்ளிட்ட பன்னாட்டு நிறுவனங் களில் வேலைவாய்ப்பை பெற்று ள்ளனர். .

இந்த கல்வி ஆண்டு மாணவர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு, சென்னை கிண்டி அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் இயங்கும் அடல் இன்குபேஷன் சென்டரான 'எனி டிகிரி.காம்' (AnyDegre.com) என்ற நிறுவனத்துடன் அனைத்து துறை மாணவர்களும் வேலைவாய்ப்பை பெறுவதற்காக 'சில்வர் பிளான்' என்ற திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளது. இதற்காக நெல்லை மாவட்டத்தில் எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரியை தேர்வு செய்து கல்லூரியில் பயிலும் மாணவர்களும், சுற்று வட்டார மாணவர்களும் பயன்பெறும் வண்ணம் வேலைவாய்ப்புக்காக கல்லூரியின் எம்.சி.ஏ துறைக்கு சிறப்பு அனுமதி அளித்துள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நிகழ்ச்சி காணொளி காட்சி மூலம் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் V.வேல்முருகன் தலைமை யுரையாற்றினார். வேலை வாய்ப்புத்துறை டீன் முனைவர் A.ஞானசரவணன் சிறப்புரையாற்றினார். எனி டிகிரி.காம் (AnyDegre.com) நிறுவனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி கிரிஷண் அறி முகவுரை நிகழ்த்தினார். இதனை யடுத்து இருதரப்பிலும் புரிந்து ணர்வு ஒப்பந்தம் கை யெழுத்தானது. இதன் மூலம் அந்நிறுவனம் எப்.எக்ஸ். கல்லூரி மாண வர்களுக்கு ரூ.4200 மதிப் பிலான கட்டணமில்லா வேலை வாய்ப்பு பயிற்சி மற்றும் சேவை களை 'எனி டிகிரி.காம்'-ல் மாண வர்கள் பதிவு (login) செய்து ஏரா ளமான பன்னாட்டு நிறுவனங்களில் வேலை வாய்ப்பை பெறலாம்.

இந்நிகழ்ச்சியில் பயிற்சித் துறை டீன் பாலாஜி, எம்.சி.ஏ துறை தலைவர் ஏஞ்சலின் ரஞ்சிதமணி, ஆல்பர்ட் பவுலின் மைக் கேல் மற்றும் பேராசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். உதவி பேராசிரியர் சண்முக சுந்தரி நன்றியுரையாற்றினார்

## ஸ்டார்ட் அப் தொழில்முனைவோர் விரிவுரை நிகழ்ச்சி

எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரியில் ஸ்டார்ட் அப் தொழில் முனைவோருக்கான ஊக்கமும் உற்சாகமும் அளிக்கப்பட்டு வருகிறது. தொழில்முனைவோர் மேம் பாட்டுக் கழகத்துடன் தொடர் புடைய கணினி அறிவியல் மற்றும் வணிக ஆய்வுத் துறையால் "புதுமை மற்றும் தொடக்க சூழல் அமைப்பு செயல்படுத்துபவர்கள்" பற்றிய ஊக்கமளிக்கும் விரிவுரை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.. இந்த நிகழ்ச்சி ஆஃப்லைன் முறையில் வழங்கப்பட்டது. தகவல் தொழில்நுட்பத் துறை உதவிப் பேராசிரியர், முனைவர் . A . ஜெய்னுல் பாத்திமா, மற்றும் தொழில் முனைவோர் துறை இணை ஒருங்கிணைப்பாளர் முனைவர் D. மணிமொழி மற்றும் கணித துறை பேராசிரியர் ஆகியோரால் ஒருங்கிணைக்கப்பட்டது. இந் நிகழ்ச்சியில் CSBS துறை.முனைவர் ஜெய்னுல் பாத்திமா மாண வர்களுக்கு தொழில் துறையில் பணியாளர்கள்,





மாணவர்களுக்கு வணிக ஆலோசனைகள் அளிக்கப்பட்டன.

வாடிக்கையாளர்கள், பங்கு தாரர்கள், கல்வியாளர்கள் மற்றும் ஸ்டார்ட்அப்களை உள்ள டக்கிய பல்வேறு புதுமையான சுற்றுச் சூழல் அமைப்பை உருவாக்குவது பற்றி ஊக்கப்படுத்தினார். புது மையின் அவசியம் மற்றும் புது மையின் செயல்முறை பற்றி அவர் விவாதித்தார். தாங்கள் சொந்தமாக தொழில் தொடங்க விரும்பும் மாண வர்களுக்கு புதுமையின் முக்கியத் துவத்தை அவர் விரிவாக எடுத்துரைத்தார். மேலும், நடை முறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் வணிக ஆலோசனைகளையும்,. வணிக ஆலோசகரின் தனிப்பட்ட குணங்களையம் அவர் எடுத்துரைத்தார்.





ஏ.பி.ஜெ. அப்துல்கலாம் 7ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது பெயரிலான வளாகத்தின் முன்பு வைக்கப்பட்டிருந்த அவரது திருஉருவ படத்திற்கு பொதுமேலாளர்கள் முனைவர் K.ஜெயக்குமார் (வளர்ச்சி), S.கிருஷ்ணகுமார் (நிர்வாகம்), கல்லூரி முதல்வர் முனைவர் V.வேல்முருகன், வளாக மேலாளர் பேராசிரியர் J.சகாரியா கேப்ரியல் மற்றும் கல்லூரி பேராசிரியர்களும் மலர் தூவி மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## ஐடியேஷன் லேப் விருந்தினர் உரை



எப்.எக்ஸ் பொறியியல் கல்லூரியின் ஐ.டி. துறையின் ஐடியேஷன் லேப் இணைந்து "வளர்ந்து வரும் தொழில் நுட்பங்களின் பங்கு" என்ற தலைப்பில் விருந்தினர் உரைக்கு ஏற்பாடு செய்தது.

ஆராய்ச்சியாளர் R.ஜார்ஜ் ஸ்வானி ஆண்டனி டைசன், (IT முன்னாள் மாணவர்கள் 2005 பேட்ச்). யுகே எழுதிய ரோபாட்டிக்ஸ் மற்றும் ரோபோடிக் செயல்முறை ஆட்டோமேஷன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். துறை தலைவர் முனைவர் .ஷாஜிலின் லோரெட் வரவேற்பு உரை வழங்கினார். முனைவர் உதவி பேராசிரியர் T.C.சுப்பு லட்சுமி விருந்தினர்களை பார்வையாளர்களுக்கு அறிமுகப்படுத் தினார்.



R.ஜார்ஜ் ரோபாட்டிக்ஸ், எம்.எல் அல்காரிதம்களின் ஒருங்கிணைப்பு பற்றிய நுண்ணறிவை மாண வர்களுக்கு வழங்கினார். ரோபா டிக்ஸ், கிளவுட், சென்சார்கள் மற்றும் உட்பொதிக்கப்பட்ட அமை ப்புகள். மாணவர்களை ஊக்கப் படுத்தினார். பன்முகத் தன்மை கொண்ட ஏதேனும் ஒரு சமீபத்திய தொழில்நுட்பத்தின் அடிப்படையில் சில திட்டங்களை உருவாக்குதல் மற்றும் குறியீட்டு திறன்களை வளர்த்துக்கொள்வதோடு, நிகழ்நேர பயன்பாட்டு நிகழ்வுகளைக் கொ ண்ட குழுக்கள், Dyson the bot உருவாக்கத்தில் உருவாக்கப்பட்ட தயாரிப்புகளையும் அவர் விளக் கினார். சில ரோபோக்களின் டெமோ மற்றும் அதில் ஒருங் கிணைக்கப்பட்ட நுண்ணறிவு அல்காரிதம்களை காட்சிப் படுத் தியது. மாணவர்களுக்கு விசா செயல்முறை குறித்தும் விளக்கமும் அளித்தார். கப்பல்கள், வெளி நாடுகளில் கல்வி. பேச்சாளர் மாணவர்களை ஊக்கப்படுத்தினார் அவர் தனது படிப்பின் போது பெற்ற தனது வாழ்க்கை அனுபவங் களையும், அவரது பணி வாழ்க்கை மற்றும் அவரது ஆராய்ச்சி வாழ்க்கையில் ஏற்பட்ட அனு பவங்களையும் அவர் பகிர்ந்து கொண்டார். . இந்நிகழ்வில் ஐடியின் II, III மற்றும் 4ம் ஆண்டு 60 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியை ஐடியேஷன் பேராசிரியர்/ஐடி. ஆய்வக பொறுப்பாளர் முனைவர் T.C.சுப்பு லட்சுமி, மற்றும் முன்னாள் மாணவர் ஒருங்கிணைப்பாளர் T.ஆன்டோ தீபக் AP/IT செய்திருந்தார்.

## எலக்ட்ரானிக்ஸ் - கம்யூனிகேஷன் துறையில் பயிலும் இரட்டை சகோதரர்களுக்கு ஹெக்சாவர் நிறுவனத்தில் வேலைவாய்ப்பு!

நெல்லை வண்ணார்பேட்டை எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரியில் எலக்ட்ரானிக்ஸ் மற்றும் கம்யூனிகேஷன் பொறி யியல் துறையில் பயிலும் இரட்டை சகோதரர்களுக்கு முன்னணி நிறுவனத்தில் ஆண்டுக்கு ரூ. 4 லட்சம் வரு மானத்தில் வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. அவர்களுக்கு கல்லூரி நிர்வாகம் சார்பில் கல்லூரி முதல்வர் முனைவர் V.வேல்முருகன் பணி நியமன ஆணையை வழங்கி பாராட்டினார்.

எப்.எக்ஸ்.பொறியியல் கல் லூரியில் படிக்கும்போதே வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தின் அனைத்து துறை மாணவர்களும் நன்கு பயிற்சி அளிக்கப்பட்டு எம்.என்.சி. (MNC) நிறுவனங்களில் பணியாற்றி வருகின்றனர். மேலும் மாண வர்களுக்கு மாத சம்பளத்துடன் கூடிய வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. இதனால், கல்லூரி மாண வர்கள் முன்னணி நிறுவனங் களில் பணி நியமன ஆணை பெற்றுள்ளனர்.

இதேபோல் எப்.எக்ஸ். பொறியியல் கல்லூரியின் மின்னணு மற்றும் தகவல் தொடர்பு பொறியியல் துறை (Electronics and Commun ication) மாணவர்கள் படிக்கும் போதே பல்வேறு முன்னணி நிறுவ னங்களில் வேலை வாய்ப்பு பெற்று வரு கின்றனர். இந்நிலை யில், எலக்ட்ரானிக்ஸ் மற்றும் கம்யூனிகேஷன் துறையில் 4ம் ஆண்டு பயிலும் இரட்டை சகோதர மாண வர்கள் S.சாய் மீனாட்சி நாதன், S.சாய் குத்தாலிங்கம் ஆகியோர் நன்கு தேர்ச்சி பெற்று, சென் னையைச் சேர்ந்த ஹெக்சாவர (HEXAWARE Technologies) எம்.என்.சி. நிறுவனத்தின் நேர் முகத் தேர்வில் கலந்து கொண்டு வெற்றி பெற்று இரண்டு பேருமே ஒரே நிறுவ னத்தில் ஆண்டுக்கு ரூ.4 லட்சத் துக்கான வருமானத்தில் வேலைவாய்ப்பு . அவர்களுக்கு



முதல்வர் முனைவர் V.வேல்முருகன் பணி நியமன ஆணை வழங்கினார்.

பணி நியமன ஆணையை கல்லூரி முதல்வர் முனைவர் V.வேல் முருகன் வழங்கி பாராட் டினார். இதற்கு ஊக்கம் அளித்த கல்லூரி பொதுமேலா ளர்கள். னைவர் K.ஜெயக்குமார், S.கிருஷ்ணகுமார், கல்லூரி முதல்வர் முனைவர் V.வேல் முருகன் கல்லூரி வேலை வாய்ப்பு துறை டீன் முனைவர் ஞான சரவணன், திறன் பயிற் சித்துறை இயக்குநர் முனைவர் பாலாஜி, துறைத் தலைவர் முனைவமுர் லஷ்மி நாராயணன் மற்றும் பேரா சிரியர்கள் ஆகியோரை ஸ்காட் கல்வி குழும நிறுவனர் முனைவர் S.கிளிட்டஸ் பாபு, நிர்வாக இயக்குநர் C.அருண் பாபு ஆகியோர் பாராட்டின

## செயல்முறை பயிற்சி

கம்ப்யூட்டர் சயின்ஸ் மற்றும் பிசினஸ் சிஸ்டம்ஸ் மற்றும் தொழில் திறன் வளர்ச்சி துறை இணைந்து தொழில் நுட்ப திறன்கள் மற்றும் மேம்பாடு திறன் பயிற்சியை நடத்தியது. கம்ப்யூட்டர் சயின்ஸ் மற்றும் தொழில் நுட்ப திறன்கள் மற்றும் மேம்பாடு திறன் பயிற்சியை நடத்தியது. திறன் பயிற்சியாளர் உதவி பேராசிரியர் அனிதா மாணவர்களுக்கு பயிற்சி அளித்தார். மாணவர்கள் தரவு பகுப்பாய்வு வெளிப்பாடுகளை பயன்படுத்தி பயிற்சி மேற் கொண்டனர்.



## எம்.சி.ஏ மாணவர்களுக்கு திறன் பயிற்சி

எப். எக்ஸ். பொறியியல் கல் லூரியின் எம்.சி.ஏ துறை யானது மாணவர்களை வேலை வாய்ப்புக்கு ஏற்ற நிபுணர்களாக மாற்றுவதற்கும், திறமையான நிபுணர்களை உருவாக்குவதே நோக்கமாக செயல்பட்டு வருகிறது. இதற்காக மாண வர்களுக்கு 12 மணி நேரம் திறன் பயிற்சி அளிக்கப் பட்டது.

டிசிஎஸ் நேர்முகத் தேர்வை எதிர்கொள்ளும் வகையில் மாணவர்களை வாய்மொழித் திறன் குறித்த மணிநேர திறன் பயிற்சித் திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டது.

நேர்காணல் . பயிற்சியில் CS, GATE, CAT, World Skill போன்ற தகுதித் தேர்வுகளை எதிர் கொள்ளும் வாய்மொழித் திறன் கொண்ட மாற்றுகள், நேர் காணலில் கேள்விகளை எதிர் கொள்வது, உடனுக்குடன் தயங்காமல் பதிலளிப்பது



வாய்மொழி ஒப்புமைகள், பிழை கண்டறிதல், வாசிப்புப் புரிதல் உயர் வரிசை வாக்கியத்தை நிறைவு செய்தல், ஏற்பாடு ஆகிய வற்றில் கவனம் செலுத்தப் பட்டது.

மேலும் வாக்கியங்கள் மற்றும் முறையான, முறைசாரா வாக் கியங்களை மேற்கொள்ள மாணவர்களுக்கு வழிகாட்டப்பட்டது. மேலும் பல வேறு ஆன்லைன் தளங் களைப் பயன்படுத்தி போலி ஆன்லைன் சோதனை அமர் வுகளைப் பயிற்சி செய்யுங்கள். தனி மாணவர்களின் திறனை அளவி டுவதற்கான மதிப்பீடுகள் 2 நாள் நடத்தப்பட்டன. இந்த பயிற்சி ஆங்கில துறை உதவி பேராசிரியர் ஷலா F.ஜான், மூலம் வழங்கப்பட்டது

## மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான 'ஆவாஸ் சாப்ட்வேர்' ஆசிரியர்களுக்கு பயிற்சி முகாம் !

தமிழக அரசு வழங்கியுள்ள ஆவாஸ் சாப்ட்வேரை பயன் படுத்தி மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு எவ்வாறு பேச்சுப் பயிற்சி அளிப்பது என்பது குறித்த சிறப்பு ஆசிரியர் களுக் கான ஒருநாள் கருத்தரங்கு எப்.எக்ஸ் கல்லூரி தொழில் முனைவோர் துறை சார்பில் நடைபெற்றது.

இதில் நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமாரி உள் ளிட்ட 4 மாவட்டங்களில் பணி யாற்றும் சிறப்பு ஆசிரியர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

தமிழக அரசின் மாற்றுத் திற னாளிகள் நலத்துறை ஆணை யரகத்தின் கீழ் செயல்படும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் மாற்றுத்திறனாளிகள் பள்ளி களில் மனவளர்ச்சி குழந்தை களுக்கு பல்வேறு சிறப்பு பயிற் சிகள் அளிக்கப்பட்டு வருகிறது.

மனவளர்ச்சி குன்றிய குழந்தை களின் கற்றல் திறனையும், ஆவாஸ் மூலம் மற்றவர்களோடு தொடர்பு கொண்டு அவர்கள் தேவையை பூர்த்தி செய்து கொள் ளும் வகையில் ஐ.ஐ.டி முன்னாள் மாணவர் ஒருவர் (இன்வென் ஷன் லேப்ஸ் இன்ஜி னியரிங் தயாரிப்புகள் பிரைவேட் லிமிடெட், Invention Labs Engineering products Limited, chennai) ஆவாஸ் சாப்ட் வேர்-ஐ கண்டுபிடித்து ள்ளார்.

இந்த சாப்ட்வேரை தமிழக அரசு மாற்றுத் திறனாளி நலத்துறை மூலம் வருடந்தோறும் சிறப்பு பள்ளிகளுக்கு வழங்கி வருகிறது. சர்வதேச அளவில் பயன்பாட்டில் இருக்கும் உயர்தரமான இந்த சாப்ட்வேர் இந்தியர்களால் முழுக்க முழுக்க இந்தியர்களால் தயாரிக்கப்பட்டது.



கருத்தரங்கில் பங்கேற்ற சிறப்பு ஆசிரியர்கள்

.இதுகுறித்த பயிற்சி கருத்தரங்கு நெல்லை வண்ணார்பேட்டை எப்.எக்ஸ் . பொறியியல் கல்லூரி தொழில் முனைவோர் துறை ஏற்பாடு செய்தது. இதில் 4 மாவட்டத்தில் இருந்து 40க்கும் மேற்பட்ட சிறப்பு ஆசிரியர்கள் கலந்து கொண்டனர் அவர்களுக்கு ஆவாஸ் செய லியை உப யோகித்து குழந்தைகளுக்கு எப்படி பயிற்சி அளிக்க வேண்டும், குழந்தைகள் பிற ருடன் எளிதில் தொடர்பு ஏற்ப டுத்திக் கொள்ள அவர்களை எப்படி பயிற்றுவிப்பது, அவர் களின் கற்கும் திறனை அதிகரிப் பதற்கு ஆவாஸ் சாப்ட்வேர் மூலம் எளிமையான முறையில் எப்படி பயிற்சி அளிப்பது போன்றவை பற்றி ஒருநாள் பயிலரங்கத்தில் சிறப்பாசிரியர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. சாத்தியமே என்பது போன்ற விஷயங்களை விவரித்து கூறினார். இந்த கருத்தரங்கில் சிறப்பு ஆசிரியர்களுக்கு மன வளர்ச்சி குழந் தைகளை பழக்குவது குறித்து பல்வேறு ஆக்க பூர்வமான உத்திகளையும், பொதுமக்கள் மத்தியில் விழிப் புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது

. இந்த புதிய சாப்ட்வேர் மூலம் தென்நிறுவனத்தினர், ஒரு குழந்தை 2 வயது ஆகும் போதே மனவளர்ச்சி பாதிக்கப்பட்டு ள்ளதா என்பதை அறிய முடியும், அந்த வயதில் இருந்தே குழந்தைகளுக்கு வழங்கப்படும் முறையான பயிற்சி மூலம், அவர்களது பேசும் திறனை அதிகப்படுத்த முடியும், மேலும் அவர்களது தேவையை நம்மிடம் எளிதில் தெரிவிக்கும் கம்யூனி கேஷன் (Communication) திறனையும் ஆவாஸ் சாப்ட்வேர் மூலம் வெற்றிகரமாக வளர்க்க முடியும், மாவட்டங்களில் உள்ள ஏழை, எளிய மக்கள் பெரிதும் பயனடைவார்கள். இக்கருத் தரங்கில் ஆசிரியர்கள் எழுப்பிய கேள்விகளுக்கும் பதில் அளிக்கப்பட்டது.

கல்லூரியின் தொழில் முனைவோர் துறை சார்பில் ஏற்பாடு செய்த இந்நிகழ்ச்சியை பொது மேலாளர்கள் முனைவர் K.ஜெயக்குமார், s.கிருஷ்ண குமார், கல்லூரி முதல்வர் முனைவர் V,வேல் முருகன், வளாக மேலாளர் J.சகாரியா கேபிரியல், முனைவர் லூர்டஸ் பூபாலராயன் உள்ளிட் டோரை ஸ்காட் கல்வி குழும நிறுவனர் முனைவர் s.கிளிட்டஸ் பாபு, நிர்வாக இயக்குநர் c.அருண் பாபு ஆகியோர் பாராட்டினர்

## பயிற்சி

